'1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். ச

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. அறிவிப்பு.

நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1994 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 22/1994) பேரவையில் ஆய்வுசெய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 22/1994). மாண்புமிகு நிதியமைச்சர்.